2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(இ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நாளைக்கும் பேரவை காலை 9.00 மணி அளவில் கூடும். கேள்வி நேரம் உண்டு. நாளை எதிர்கட்சித் தலைவர் உரையாற்றுவார். பின்னர் முதலமைச்சர் அவர்கள் பதிலுரையுடன் இந்தப் பேரவைக் கூட்டம் முடியும். தற்போது ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது திரு. எஸ். ஆர். இராதா தொடர்ந்து பேசுவார்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12.20)

6. ஆளுநரின் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணை தலைவர் அவர்களே, நான் அன்றைக்குப் பேசுகின்ற நேரத்தில், என்னுடைய உணர்வுகளை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்து விட்டுப் போன இடத்திலே இருந்து தொடரவேண்டும் என்ற உணர்வோடு தற்போது ஏற்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களைப் பற்றி இந்த மாமன்றத்திலே விவாதித்தோம். 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் கட்டுக்கோப்பாக இருந்தபோது நாம் காங்கிரஸ் கட்சியினுடைய உறவைப் பெற்றிருந்தோம். அந்த உறவைப் பெற்றிருந்த அந்த நேரத்தில் காமராஜ் அவர்களை எதிர்த்து நாம் போராடுகிற நிலைமையில் இருந்த நேரத்தில் காமராஜரை எதிர்த்து நாம் அன்றைக்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றோம். அதற்குப் பின்னால் 1977 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவாயிற்று. அந்த நேரத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய துணையோடு தேர்தல் நடத்துகிற நிலைமை ஏற்பட்ட நேரத்தில் அன்றைக்கு ஏற்பட்ட ஒப்பந்தத்தை எந்த அளவுக்கு விமர்சித்தார்கள் என்பதை நான் என்னுடைய நினைவிலே வைத்துக் கொண்டிருக்கிறேன். அன்றைக்கு ஏற்பட்ட ஒப்பந்தத்தை யார் யார் கேலி பேசினார்கள், என்னென்ன சொன்னார்கள் என்றெல்லாம் ஆண்டுகள் பல கடந்துவிட்டது என்றாலும்கூட என் நினைவிலே இருக்கிறது. ஒரு வார்த்தை கூட மறையவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அதைத் தெரிவிப்பதற்கு முன்னாலே என் அருமை நண்பர்கள் நினைவுக்கு ஒன்றைக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949–லே திராவிட முன்னேற்றக் கழகம் துவக்குவதற்கு முன்னாலே,